# குடிமக்கள் சாசனம்

# மத்திய கடவுச்சீட்டு அமைப்பு

# வெளியுறவுத்துறை அமைச்சகம்

# கடவுச்சீட்டு சேவைகள் வழங்கல் மற்றும் விநியோகம்

**2016**



1. **அறிமுகம்**

1.1 இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தன் கீழ் உள்ள அலுவலகம் மூலமாக, இந்திய கடவுச்சீட்டு மற்றும் இதர பயண ஆவணங்கள் அதாவது அடையாள சான்றிதழ், அவசர சான்றிதழ், காவல் துறை அனுமதிச் சான்றிதழ் மற்றும் எல்லை கடந்து செல்வதற்கான பயண அனுமதி ஆகியவை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரிகள் மூலமாக வழங்கப்படுகிறது.

1.2 இந்திய குடிமக்களுக்கு கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்கள் வழங்குதல் கடவுசீட்டு சட்டம், 1967 மூலமாக கட்டுப்படுத்தப்படுகின்றன , செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்கள் இல்லாமல் எந்த ஒரு நபரும் இந்தியாவில் இருந்து பயணம் செய்ய இந்த சட்டம் தடுக்கிறது. கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்கள் பெறுவதற்கான நடைமுறைகள் மற்றும் தெளிவாக எந்த அடிப்படையில் மறுப்பதற்கான விதிமுறைகளும் இந்த சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. கடவுச்சீட்டு அல்லது மற்ற பயண ஆவணங்களைப் பறிமுதல் மற்றும் ரத்து செய்வதற்கான விதிமுறைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் கடவுச்சீட்டு மறுப்பு உத்தரவு , பறிமுதல் , ரத்து போன்றவைகளுக்கு எதிராக முறையீடுகள் செய்வதற்கான வழிமுறைகளும் இந்த சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**2. மக்கள் சாசனம்**

2.1. வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய கடவுச்சீட்டு அமைப்பு நிர்வாக கட்டுப்பாட்டில் வரும் இந்தியாவில் உள்ள அனைத்து கடவுச்சீட்டு அலுவலகங்கள் மூலமாக கடவுச்சீட்டு சேவைகள் குடிமக்கள் சாசனத்தின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் மூலமாக அளிக்கப்படும் கடவுச்சீட்டு சேவைகள் இந்த சாசன நோக்கத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளது.

**3. தொலை நோக்கு அறிக்கை**

3.1. வெளியுறவுத்துறை அமைச்சகம் , அதன் கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரிகள் மூலமாக, கடவுச்சீட்டு சட்டம் 1967 மற்றும் சட்டவிதிகளுக்கு ஏற்ப சரியான நேரத்தில், வெளிப்படையான, நம்பகமான முறையில், வசதியான சூழலில் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகள், பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலமாக சேவைகள் வழங்கப்படுகிறது.

**4. சேவைகளின் குறியீடு**

4.1. வழங்கல்:

- கடவுச்சீட்டு
- காவல் துறை அனுமதிச் சான்றிதழ்
- கடவுச்சீட்டு ஒப்படைப்பு சான்றிதழ்
- கடவுச்சீட்டு அடிப்படையிலான இதர சான்றிதழ்.
- 

4.2. குடிமக்கள் நன்மைக்காக கடவு ச்சீட்டு தொடர்புடைய விரிவான தகவல்கள் , கட்டணங்கள் மற்றும் தேவையான ஆவணங்கள் உட்பட கடவு ச்சீட்டு சேவைகள் தொடர்பான தகவல்களை www.passportindia.gov.in என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**5. குடிமக்களுக்கான உதவும் சேவைகள்**

| | |
|---|---|
| கடவுச்சீட்டு சேவை மையம் (பி.எஸ்.கே.) | இந்தியா முழுவதும் உள்ள கடவுச்சீட்டு சேவை மையம் நிர்வாக ஆதரவு , தகவல் மையம் , நகல் எடுத்தல் , உணவு மற்றும் குளிர்பானங்கள் வசதிகள் , பொது தொலைபேசி சாவடி , குழந்தை பராமரிப்பு அறை , தொலைக்காட்சி , மின்னணு வரிசையில் மேலாண்மை அமைப்பு , ஏடிஎம் வசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பு வசதிகள் முதலான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. |
| தகவல் பெறுதல், இனணயதளப் பதிவு, விண்ணப்பம், கட்டணம், முன் பதிவு மற்றும் விண்ணப்பத்தின் நிலை அறிதல் | 'எங்கேயும் எப்போதும் ' கிடைக்கக்கூடிய அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது. கடவுச்சீட்டு இனணயதளத்தில் குடிமக்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க மற்றும் அவர்களது அருகாமையில் உள்ள கடவுச்சீட்டு சேவை மையத்திற்கு (பி.எஸ்.கே.) வருகைபுரிய 1-7 வேலை நாட்களில் முன்பதிவு பொதுவாக கிடைக்கும். எனினும் , பருவகால மற்றும் பிராந்திய மாறுதலுக்கு உட்பட்டது. |
| தேசிய அழைப்பு மையம் | 24 X 7 கட்டணமில்லா இலவச அழைப்பு உதவி காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை 17 இந்திய மொழிகளில் கிடைக்கிறது. |
| குறுஞ்செய்தி மூலம் நிலைக் காணும் சேவை | இலவச குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) சேவையை தவிர கட்டணம் செலுத்துவது மூலமாக விருப்ப கட்டணம் சேவையையும் வழங்குகிறோம். |
| மின்னஞ்சல் சார்ந்த உதவி கேட்டல் | குடிமக்களின் கேள்விகளுக்கு கடவுச்சீட்டு இணையதளம் மூலம் பதில் வழங்கப்படுகிறது. |
| mPassport சேவை | ஸ்மார்ட்போன் பயன்பாட்டாளர்கள் கைப்பேசி பயன்பாட்டின் மூலமாக கடவுச்சீட்டுத் தொடர்பான தகவல்களையும் மற்றும் |

| | |
|---|---|
| | விண்ணப்பத்தின் நிலையையும் அறிந்துகொள்ளலாம். |
| கடவுச்சீட்டு மேளா | பொதுவாக கடவுச்சீட்டு மேளா குடிமக்களுக்கு விடுமுறை நாட்களில் கடவுச்சீட்டு அலுவலகம்/ கடவுச்சீட்டு சேவை மையத்தில் ஒரு சிறப்பு நடவடிக்கையாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் காலம் நீட்டிக்க நடத்தப்படுகிறது. |
| கடவுச்சீட்டு குறை தீர்க்கும் நாள் | பொதுவாக சிக்கலான கடவுச்சீட்டு மற்றும் நீண்ட நாள் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் நிவர்த்தி செய்ய கடவுச்சீட்டு அலுவலகங்களில் கடவுச்சீட்டு குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகின்றன. |
| கடவுச்சீட்டு சேவை முகாம் | விண்ணப்பதாரர்களின் நலனுக்காக , கடவுச்சீட்டு சேவை முகாம்கள் கடவுச்சீட்டு சேவை மைய த்திலிருந்து தொலைதூர இடங்களில், தேவையின் அடிப்படையில் நடைபெறுகிறது. |

### 6. சேவை வழங்கல் தரநிலைகள் மற்றும் கால நிர்ணயம்

சட்டரீதியான ஏற்பாடுகளின்படி ஒரு விண்ணப்பம் பெற்றுக் கொண்ட உடனே, கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்ட பிறகு , கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணங்களை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடிவு மேற் கொள்வர். கீழே கொடுக்கப்பட்ட கால அவகாசம் காவல் துறை விசாரணை (பி.வி.) அல்லது அத்தகைய விசாரணை அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரிகளின் கட்டுப்பாட்டை தாண்டி இருக்கலாம்.

| சேவை இயல்பு | காலக்கெடு அறிகுறி | குறிப்புகள் |
|---|---|---|
| புதிய (முதல் முறையாக) கடவுச்சீட்டு (வழங்குவதற்கு முன் காவல் துறை விசாரணை தேவை). | 30 வேலை நாட்கள் [காவல் துறையின் விசாரணை. முடியும் காலம் தவிர). | பதிவு செய்த மற்றும் முழுமையான ஆவணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரியின் திருப்தி தெளிவான காவல் துறையின் விசாரணை அறிக்கை. |
| புதிய (முதல் முறையாக) கடவுச்சீட்டு வழங்கல் { கடவுச்சீட்டு வழங்கியபின் காவல் துறை விசாரணை அல்லது காவல் துறை விசாரணை தேவை இல்லை} I). உடனடி II). அரசு | 7 வேலை நாட்களுக்குள் | பதிவு செய்த மற்றும் முழுமையான ஆவணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து விசாரணை சான்றிதழ் / அடையாளச் சான்றிதழ் / தடையின்மைச் சான்றிதழ் / அனுமதிச் சான்றிதழின் நம்பகத்தன்மை மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரியின் திருப்தி. |

| | | |
|---|---|---|
| /பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் முதலியன | | |
| காலாவதியாகும் கடவுச்சீட்டுக்கு மீண்டும் கடவுச்சீட்டு வழங்குதல் மற்றும் முடிந்து போன விசா பக்கங்கள். | 7 வேலை நாட்களுக்குள் (முன் காவல் துறை விசாரணை தேவையில்லாத சந்தர்ப்பங்களில்) | பதிவு செய்த மற்றும் முழுமையான ஆவணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரியின் திருப்தி, தனிப்பட்ட விவரங்களில் எந்த மாற்றமும் இல்லாதபோது. |
| (அ) தனிப்பட்ட விவரங்களில் மாற்றம் மற்றும் (ஆ)இழந்த/ திருடப்பட்ட / சேதமடைந்த / சிதைந்த கடவுச்சீட்டுக் காக மீண்டும் கடவுச்சீட்டுத் தேவைப்பட்டால் | 7 வேலை நாட்களுக்குள் (முன் காவல் துறை விசாரணை தேவையில்லாத சந்தர்ப்பங்களில்) 30 வேலை நாட்கள் வரை காவல் துறை விசாரணை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் [காவல் துறையின் விசாரணை காலம் தவிர). | பதிவு செய்த மற்றும் முழுமையான ஆவணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரியின் திருப்தி மற்றும் தேவையான விசாரணை மற்றும் அனுமதிகள். |
| இதர சேவைகள் அதாவது காவல் துறை அனுமதிச் சான்றிதழ், ஒப்படைப்பு சான்றிதழ் அல்லது கடவுச்சீட்டு சம்பந்தமான இதர சான்றிதழ்கள். | 3 வேலை நாட்களுக்குள் (முன் காவல் துறை விசாரணை தேவையில்லாத சந்தர்ப்பங்களில்) | பதிவு செய்த மற்றும் முழுமையான ஆவணங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து, ஒப்புதல் அதிகாரி திருப்தி மற்றும் தேவையான விசாரணை மற்றும் அனுமதிகள். |

**7. விண்ணப்பதாரர்களின் பொது கடமைகள்**

7.1. சட்டப்பூர்வமாக , அனைத்து பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள் சரியான தகவல் மற்றும் உண்மையான சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். கடவுச்சீட்டு சட்டம் 1967 ன் கீழ் ஒரு விண்ணப்பதாரர் கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்களை பெறுவதில் எந்தவொரு தவறான தகவல் தரு வதோ அல்லது தகவலை மறைப்பதோ கூடாது .

அத்தகைய எந்த ஒரு செயலுக்கும் இரண்டு ஆண்டுகள் வரை சிறை த் தண்டனை அல்லது அபராதம் ரூ.5000/- வரை அல்லது இரண்டுமே தண்டனையாக வழங்கப்படும்.

7.2. www.passportindia.gov.in என்னும் இணையதளத்தில் குறிப்பிட்ட படிவத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து கைரேகை,புகைப்படம் எடுப்பதற்கு மற்றும் கட்டணம் செலுத்துதவதற்கு சம்பந்தப்பட்ட நபர் கடவுச்சீட்டு சேவை மையத்திற்கு (பி.எஸ்.கே.) நேரில் செல்ல வேண்டும் நேரக்கட்டுப்பாட்டுடன் எளிதாக முறைப்படி நிறைவு செய்ய மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரிகள் சரிபார்ப்பு முடியும் வரை விண்ணப்பதாரர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

7.3. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தின் நிலையைக் கண் டறிந்த பிறகே எந்தவித கேள்வியோ / மனக்குறையோ எழுப்புவதற்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**8. குறைதீர்ப்பு**

8.1. சேவை தரம் , சேவை வழங்குவதில் தோல்வி அல்லது கடவுச்சீட்டு வழங்கும் அதிகாரியின் செயல்பாட்டில் குறைகளையோ அல்லது புகா ரோ இருப்பின் , (அ) மத்திய பொது குறைகளைத் தீர்ப்பதற்கான மற்றும் கண்காணிப்பு அமைப்பு ( CPGRAMS) pgportal.gov.in ல் இணையமுகப்பு அல்லது (ஆ) www.passportindia.gov.in அல்லது (இ) கட்டணமில்லா தொலைபேசி எண் 1800-258-1800 மூலமாக பதிவு செய்யலாம்.

**9. கருத்துக்கள் / பரிந்துரைகள்**

9.1. கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கலாம்,
(i) கடவுச்சீட்டு இணையதளம் www.passportindia.gov.in ல் கருத்துக்களை தேர்வு செய்யவும்.
(ii) கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 -258-1800 ல் அழைக்கவும் அல்லது (iii) உதவி கடவுச்சீட்டு அதிகாரி ( PG) பொது குறை தீர்க்கும் பி ரிவு, அறை எண் 24 , CPV பிரிவு, வெளியுறவுத்துறை அமைச்ச கம், பாட்டியாலா ஹவுஸ் இணைப்பு , திலக் மார்க், புது தில்லி 110001, தொலைபேசி எண் 011-23384519, 23384497, தொலைநகல் எண் 011-23384461, மின்னஞ்சல்: passport.pg@mea.gov.in.

**10. சாசனத்தின் அடுத்த விமர்சன (Review) ஆண்டு /மாதம்**: இந்த சாசனம் பிப்ரவரி 2016 ல் வழங்கப்பட்டது. இந்த சாசனம் ஜூலை 2016 ல் மறுபரிசீலனை **(Review)** செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*****